**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2022 ம் வருடம் ஜீன் திங்கள் 21 ம் நாள் செவ்வாய்கிழமை

**அ.வ.எண்.295/2020 இல் இ.ம.எண்.01/2020**

1.சிவசாமி
2.ரத்தினசாமி
3.கந்தவடிவேல் ... மனுதாரர்கள் /வாதிகள்

/ எதிர் /

காயத்ரி ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 09.06.2022 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மனோகர் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

தாவா சி மற்றும் டி செட்யூல் வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அமைதியான சுவாதீன அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா ஏ செட்யூல் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து ஆதியில் ஒரு முத்துலட்சுமி என்பவருக்கு 12.06.1985ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி முத்துலட்சுமி என்பவரும் அவரது கணவரான கந்தசாமி கவுண்டரும் இறந்துவிட்ட நிலையில் 1, 2 மனுதாரர்கள் / வாதிகள் தற்போது தாவா சொத்தின் சர்வசுதந்திர உரிமையாளர்களாக இருந்து தங்களது சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகின்றனர். தாவா பி செட்யூல் சொத்து 29.01.1999ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி 3ம் மனுதாரர் / 3ம் வாதிக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் அதனை தனது சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு அருகாமையில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி மற்றும் அவரது கணவரான சதீஷ் என்பவருக்கு சர்வே எண்.180 மற்றும் 181ல் கண்ட சொத்துக்கள் அமைந்துள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவரான சதீஷ் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும், அதனை ஒட்டி அமைந்துள்ள சொத்துக்களும் ஆதியில் கோலாலி ராவுத்தர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில், அவர்கள் மேற்படி சொத்துக்களை பகுதிகளாக மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளனர். மேற்படி சொத்தில் நெடுங்காலத்திற்கு முன்பு தென்வடல் ரோட்டிலிருந்து தென்புறமாக அமைந்துள்ள சர்வே எண்.183 வரை ஒரு வண்டித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி வண்டித்தடமானது சர்வே எண்.180 மற்றும் 181 வழியாக செல்லும் நிலையில் வண்டித்தடம் சர்வே எண்.180/2C மற்றும் 181/2 என்று உட்பிரிவு

செய்யப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்.180 மற்றும் 181 கோலாலி ராவுத்தர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் அவரது இறப்பிற்கு பின்னர் அவரது மனைவியான ரஹமத் பீபி மற்றும் அவரது மகன்களான சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு, அவர்களது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தது. மேற்படி ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுக்கும் அருகாமையில் உள்ள சொத்தின் உரிமையாளர்களுக்கும் இடையே வண்டித்தடம் தொடர்பாக அடிக்கடி பிரச்சனை எழுந்த நிலையில் 12.06.1985 ம் தேதியில் 1, 2 மனுதாரர்கள் / வாதிகளின் தாயாரான முத்துலட்சுமி, ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் ஒரு வண்டித்தட ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். வண்டித்தட ஒப்பந்தத்தின்படி 1, 2 மனுதாரர்கள் / வாதிகளின் தாயாரான முத்துலட்சுமி என்பவருக்கு மேற்படி வண்டித்தடத்தை அனுபவிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக முத்துலட்சுமி தொகையையும் செலுத்தியுள்ளார். மேற்படி வண்டித்தடமானது சி செட்யூலில் ஒன்றாவது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வண்டித்தட ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலிருந்து முத்துலட்சுமி என்பவரும் அவரது குடும்பத்தினரும் வண்டித்தடத்தை பயன்படுத்தி தாவா ஏ செட்யூல் சொத்தினை சென்றடைந்து வருகின்றனர். மேற்படி வண்டித்தடத்தை தவிர தாவா ஏ செட்யூல் சொத்திற்கு வேறு வண்டித்தடம் எதுவும் இல்லை. 3 ம் மனுதாரர் / 3 ம் வாதி 1999 ம் வருடத்தில் சர்வே எண்.181 க்கு அருகாமையில் அமைந்துள்ள சர்வே எண்.205 ல் கண்ட சொத்தினை கிரையம் பெறுவதற்கு ஏற்பாடு செய்த போது தாவா பி செட்யூல் சொத்தினை சென்றடைவதற்கு 26.01.1999 ம் தேதியில் மேற்படி ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் தொகை செலுத்தி ஒரு வண்டித்தட ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளார். அதன் பின்னர் தான் தாவா பி செட்யூல் சொத்தினை அன்னபூரணி என்பவரிடமிருந்து 3 ம் மனுதாரர் / 3 ம் வாதி கிரையம் பெற்றுள்ளார். வண்டித்தட ஒப்பந்தத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள தாவா சி செட்யூல் இரண்டாவது அயிட்ட வண்டித்தடத்தை பயன்படுத்தி 3ம் மனுதாரர் / 3ம் வாதி தாவா பி செட்யூல் சொத்தினை சென்றடைந்து வருகிறார். தாவா சி செட்யூல் இரண்டாவது அயிட்ட வண்டித்தடத்தை தவிர பி செட்யூல் சொத்திற்கு வேறு வண்டித்தடம் இல்லை. சர்வே எண்.204ல் கண்ட சொத்து ஆதியில் ஒரு குழந்தைவேல் மற்றும் பழனிவேல் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் வண்டித்தடத்தினை அனுபவிக்கும் உரிமையை பொறுத்து ஒப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளனர். 02.09.2008ம் தேதியில் மேற்படி குழந்தைவேல் இறந்துவிட்ட நிலையில் மேற்படி பழனிவேல் என்பவர் ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் வண்டித்தடத்தின் அகலத்தை 12½ அடியாக அதிகரித்தும், வளைவு பகுதிகளில் 16 அடி என்று அதிகரித்தும் மற்றொரு வண்டித்தட ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். மேற்படி வண்டித்தடம் தாவா டி செட்யூலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பழனிவேல் என்பவர் சர்வே எண்.204ல் கண்ட சொத்தினை ஒரு பாலசுப்பிரமணியம் மற்றும் முத்துலட்சுமி ஆகியோர்களுக்கு விற்பனை செய்துவிட்ட நிலையில் சர்வே எண்.204ல் கண்ட சொத்தினை பாலசுப்பிரமணியம் மற்றும் முத்துலட்சுமி ஆகியோர்கள் அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி அனைத்து வண்டித்தட ஒப்பந்தத்திலும் பழுதில்லாமல் வண்டித்தடத்தை பராமரிக்கவும், அதில் சேதம் ஏற்பட்டால் சரிபடுத்தவும் ஷரத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவரான சதீஷ் என்பவர், ரஹமத் பீவி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் வாங்கியுள்ள நிலையில் அவருக்கு வண்டித்தட ஒப்பந்தத்தினை பற்றி நன்கு தெரியும். தாவா சி செட்யூலாக குறிப்பிடப்பட்டுள்ள வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் அனுபவிப்பதை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறு செய்யாமல்

இருந்து வந்த நிலையில் வழக்கினை தாக்கல் செய்வதற்கு பத்து நாட்களுக்கு முன்பு மனுதாரர்கள் / வாதிகள் வண்டித்தடத்தை பயன்படுத்தி வருவதை எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்தார். எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள வண்டித்தட ஒப்பந்தம் எதிர்மனுதாரர் / பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியது என்ற நிலையில் அவ்வாறு தடை செய்வதற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆனால் எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்து வரும் காரணத்தால் மனுதாரர்கள் / வாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் பயன் இல்லை. எதிர்மனுதாரர் / பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பு வண்டித்தட ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில் அதனை தடை செய்யும் உரிமை எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு இல்லாத நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் தாவா மனுச் சொத்தில் உள்ள மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவத்தை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :**

மனுதாரர்கள் / வாதிகளின் மனு பொய்யும், மோசடியானது என்பதால் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் / பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் / வாதிகளே நிரூபிக்க வேண்டும். மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் / வாதிகள் தங்களது உரிமை ஆவணங்களுக்கு முரணாக எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு

தனித்து பாத்தியப்பட்டு எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் உரிமையில் உள்ள தடத்தை பொறுத்து உரிமை கோருகின்றனர். தாவா சி செட்யூல் ஒன்றாவது அயிட்ட மற்றும் இரண்டாவது அயிட்ட சொத்து விபரம் தவறானது. தாவா சொத்து விரபத்தில் உள்ள விபரத்திற்கு முரணாக மனுதாரர்கள் / வாதிகளின் வசதிக்கேற்ப வரைபடத்தினை தாக்கல் செய்துள்ளனர். தாவா ஏ, பி செட்யூல் சொத்துக்களுக்கு தாவா சி செட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே தடம் தான் உள்ளது என்பது உண்மைக்கு மாறானது. 1, 2 மனுதாரர்கள் / வாதிகள் க.ச.எண்.183 காலை பூமிகளுக்கு தென்வடல் இட்டேரியிலிருந்து க.ச.178 காலை வழியாக தெற்கே வந்து க.ச.182ன் வழியாக வரும் வண்டிப்பாதையை உபயோகப்படுத்தி சென்று வருகின்றனர். அதுபோல் 3ம் மனுதாரர் / 3ம் வாதி க.ச.45, 205 பூமிகளுக்கு மேல்புறமுள்ள ஓடை புறம்போக்கு வழியாக வந்து செல்கிறார். 1, 2 மனுதாரர்கள் / வாதிகளின் முன்பாத்தியஸ்தரான முத்துலட்சுமி என்பவருக்கு கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து க.ச.180 காலை கிழகோட்டில் தென்வடலாக பின் மேற்படி காலையில் 7½ அடி அகலத்தில் கிழமேலாகவும் செல்லும் வண்டித்தடத்தின் பாத்தியம் கொடுத்து 12.06.1985ம் தேதியிட்ட தடபாத்திய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சி செட்யூல் இரண்டாவது அயிட்ட சொத்து விபரத்தில் தடபாத்தியம் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. 3ம் மனுதாரர் / 3ம் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சி செட்யூல் இரண்டாவது அயிட்ட சொத்து விபரத்தில் தடபாத்திய ஆவணமான 307/1999 பத்திரத்திற்கு முரணாக உள்ளது. மனுதாரர்கள் / வாதிகள் அவர்களது வசதிக்கேற்ப எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வண்டித்தடத்தில் உரிமை கோருகின்றனர். க.ச.48 தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து க.ச.180 காலையில் நேர் தெற்காக வரும் வண்டித்தடம் க.ச.180/2 சி ஆகும். இது எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு 09.12.2011ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின்படி பாத்தியப்பட்டுள்ளது. அதில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு எவ்வித பாத்திய

உரிமையும் கிடையாது. மனுதாரர்கள் / வாதிகள் தங்களுக்கு தடபாத்திய உரிமை இல்லாத எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வண்டித்தடத்தில் பாத்தியம் உள்ளதாக தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். வண்டித்தடம் செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ள க.ச.181/2 காலை எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவரான சதீஸ் என்பவருக்கு 27.11.2009 ம் தேதியிட்ட ஆவணத்தின்படி பாத்தியப்பட்டு அவரது தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது. மேற்படி காலையில் வண்டித்தடம் உள்ளதாக மனுதாரர்கள் / வாதிகள் கூறியுள்ள நிலையில் மேற்படி சதீஷ் வழக்கிற்கு அவசியமான தரப்பினர். சதீஸ் என்பவர் வேண்டுமென்றே கட்சி சேர்க்கப்படாமல் உள்ளதால் தாவா வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தகுந்த முன்னறிவிப்பின்றி, காலஅவகாசம் இல்லாமல் அறிக்கையையும், வரைபடத்தினையும் தாக்கல் செய்துள்ளார். க.ச.180/2 காலையில் தெற்கோட்டில் மேற்படி சதீஸ் என்பவரின் தண்ணீர் டேங்க்கும், மரங்களும் அவருடைய வீட்டின் மேல்புறம் உள்ளது. வழக்கில் தாவா சி செட்யூல் ஒன்றாவது மற்றும் இரண்டாவது அயிட்டங்களைப் பொறுத்து பரிகாரங்களை கோரிவிட்டு தனியாக தாவா டி செட்யூல் சொத்து வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / வாதிகள் தங்களது தடபாத்திய உரிமை இல்லாத க.ச.180/2 சி காலையில் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வண்டித்தடத்தில் உரிமை கோருவதால் வீண்பிரச்சனைகளும், சங்கடங்களும் ஏற்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவர் வேலை நிமித்தமாக வெளிநாட்டில் உள்ளார். க.ச.204 ஐ பழனிவேல், குழந்தைவேல் ஆகியோர்களிடமிருந்து பாலசுப்பிரமணியம், முத்துலட்சுமி ஆகியோர் கிரையம் பெற்றுள்ள நிலையில் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக கட்சி சேர்க்காமல் எதிர்மனுதாரர் / பிரதிவாதி வண்டித்தடத்தினை அழிக்கவும், சேதப்படுத்தவும் முற்பட்டதாக கூறியுள்ளது பொய்யானது. மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்

/ பிரதிவாதியை வீண் கஷ்டநஷ்டத்திற்கு உள்ளாக்கி இல்லாத உரிமைகளை அடைய முயற்சி செய்கின்றனர். மனுதாரர்கள் / வாதிகள் தடபாத்திய உரிமை ஆவணங்களுக்கு முரணாகவும், அவசிய தரப்பினர்களை சேர்க்காமலும் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) தாவா சி மற்றும் டி செட்யூல் வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அமைதியான சுவாதீன அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதியோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில், சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாவா ஏ செட்யூல் சொத்தினை 1, 2 மனுதாரர்கள் / வாதிகளின் தாயாரான முத்துலட்சுமி என்பவர் கிரையம் பெற்றுள்ளதாகவும், மேற்படி முத்துலட்சுமி என்பவரும், அவரது கணவரும் இறந்துவிட்ட நிலையில் அவர்களின் வாரிசுகளான 1, 2 மனுதாரர்கள் / வாதிகள் தாவா ஏ செட்யூல் சொத்தினை தங்களது சுவாதீன அனுபவத்தில்

வைத்து அனுபவம் செய்து வரும் நிலையில் முத்துலட்சுமி தாவா ஏ செட்யூல் சொத்திற்குண்டான ஒன்றாவது அயிட்ட சி செட்யூல் சொத்தினைப் பொறுத்து மேற்படி சொத்தின் முன்பாத்தியஸ்தர்களான ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் ஒரு வண்டித்தட ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும், அதுபோல் தாவா பி செட்யூல் சொத்தினை கிரையம் பெற்றுள்ள 3ம் மனுதாரர் / 3ம் வாதி மேற்படி ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் வண்டித்தடத்தினைப் பொறுத்து வண்டித்தட ஒப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதற்காக முத்துலட்சுமியும், 3ம் மனுதாரர் / 3ம் வாதியும், ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களிடம் தொகையை செலுத்தியுள்ளதாகவும், அதுபோல் க.ச.204ன் உரிமையாளரான பழனிவேல் என்பவரும் தாவா வண்டித்தடத்தினைப் பொறுத்து ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் வண்டித்தடத்தினைப் பொறுத்து ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும், வண்டித்தடத்தின் அகலத்தினை விரிவுபடுத்தும் பொருட்டு மீண்டும் ஒரு வண்டித்தட ஒப்பந்தத்தினை 02.09.2008ம் தேதியில் ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும், அதில் வண்டித்தடமானது 12½ அடி அகலத்திற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், வளைவு பகுதிகளில் 16 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணங்களும், தடபாத்திய ஒப்பந்தங்களும் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வண்டித்தடமானது க.ச.180 மற்றும் 181 ஆகிய காலைகளின் வழியாக செல்லும் நிலையில் க.ச.180 மற்றும் க.ச.181 ஆகியவற்றை ரஹமத்பீபி வகையறாக்களிடமிருந்து கிரையம் பெற்ற எதிர்மனுதாரர் / பிரதிவாதி க.ச.180ன் வழியாக செல்லும் வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர் / பிரதிவாதி தொடர்ந்து இடையூறு செய்து வருவதாகவும், வண்டித்தடத்தின் அனுபவ உரிமை

எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களான ரஹமத்பீபி வகையறாக்களால் மனுதாரர்கள் / வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை மறுக்கும் உரிமை எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு இல்லாத நிலையில் வண்டித்தடத்தினைப் பொறுத்து மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், க.ச.எண்.181/2 காலை எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவரான சதீஷ் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த போதிலும், மேற்படி சதீஷ் என்பவர் வேலையின் நிமித்தமாக வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் தாவா சி செட்யூல் வண்டித்தடத்தினை பயன்படுத்தி வருவதை அவர் இடையூறு செய்யாத காரணத்தாலும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி மட்டுமே இடையூறு செய்து வருவதாலும், எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் / வாதிகளுக்கும், எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களான ரஹமத்பீபி வகையறாக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வண்டித்தட ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்படுவதாகவும், மேற்படி வண்டித்தட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு முரணாக சொத்து விபரத்தில் வண்டித்தடத்தினை பற்றி குறிப்பிட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட வண்டித்தடத்தின் மீது மனுதாரர்கள் / வாதிகள் உரிமையை கோரியுள்ளதாகவும், ரஹமத்பீபி வகையறாக்களுக்கும், மனுதாரர்கள் / வாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட வண்டித்தட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் அனுபவிக்க எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லாத நிலையில் பொய்யான விபரங்களை கூறி மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர் /

பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட வண்டித்தடத்தின் மீது உரிமையை கோருவதால் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

9) இருதரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக தாவா சி செட்யூல் சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இம்மனுவானது அசல் வழக்கு முடிவிற்கு வரும் வரையில் மனுச் சொத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் சுவாதீன அனுபவத்தினை எதிர்மனுதாரர் / பிரதிவாதி யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா ஏ செட்யூல் சொத்து 1, 2 மனுதாரர்கள் / வாதிகளுக்கும், தாவா பி செட்யூல் சொத்து 3ம் மனுதாரர் / 3ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.4 கிரைய ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

10) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களுக்கு, தாவா சி செட்யூல் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று, இரண்டு அயிட்ட வண்டித்தடத்தினை தவிர வேறு வண்டித்தடம் இல்லாத நிலையில் தாவா சி செட்யூல் ஒன்றாவது அயிட்ட வண்டித்தடத்தினை பொறுத்து 1, 2 மனுதாரர்கள் / வாதிகளின் தாயார் 1985ம் வருடத்திலும், தாவா சி செட்யூல் இரண்டாவது அயிட்ட வண்டித்தடத்தினைப் பொறுத்து 3ம் மனுதாரர் / 3ம் வாதி 1999ம் வருடத்திலும் தனித்தனியாக ரஹமத்பீபி, சாகுல் அமீது மற்றும் அப்பாஸ் ஆகியோர்களுடன் வண்டித்தட ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக கூறி மேற்படி ஒப்பந்தங்கள் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11) மேற்படி தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்திற்குண்டான தாவா சி செட்யூல் வண்டித்தடத்தினை பொறுத்து மனுதாரர்கள் / வாதிகளுக்கு அனுபவ

உரிமையுள்ளது என்ற நிலையில் அதனை எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்து வருவதால் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

12) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 வண்டித்தட ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளது ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், ஆனால் மேற்படி வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரங்களுக்கு முரணாக மனுதாரர்கள் / வாதிகள் சி செட்யூல் சொத்து ஒன்று, இரண்டு அயிட்ட வண்டித்தட விபரங்களை குறிப்பிட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட க.ச.எண்.180 மற்றும் க.ச.எண்.180/2C ல் செல்லும் வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகள் உரிமை கோருவதாக கூறப்பட்டுள்ளது.

13) தாவா சி செட்யூல் சொத்து விபரத்தில் அயிட்டம் – 1 முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சப்ரிடிடு, பொள்ளாச்சி தாலூக்கா, ஜமீன் புரவிபாளையம் தாக்கல் 25/2 சேர்வைகாரன் பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180 நெ.காலை பு.ஏ.2.37, க.ச.181 நெ.காலை பு.ஏ.5.72 இவைகளில் அதாவது க.ச.181 நெ.காலையில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தென்வடலாகவும் அதிலிருந்து கிழமேலாகவும் அதைத் தொடர்ந்து க.ச.180 நெ.காலையில் கிழமேலாகவும் தென்வடலாகவும் அதாவது தற்போதைய நிலஉடமை மேம்பாட்டுத் திட்ட புது சர்வேயில் பிளான்மார்க் செய்யப்பட்டுள்ளபடி நிலஉடமை மேம்பாட்டுத் திட்ட புது சர்வேயில் பிளான்மார்க் செய்யப்பட்டுள்ளபடி உள்ள வண்டித்தடத்தின் வழியாக 4–லக்கமிட்டவருக்கும் அவரது கணவர் கந்தசாமி கவுண்டருக்கும் பாத்தியப்பட்ட க.ச.183 நெ. காலை வரையில் உள்ள 7½ அடி அகல வண்டித்தடம் மட்டும்.

14) அயிட்டம் –2 முதலில் திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோவை பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சப்ரிடிடு, பொள்ளாச்சி தாலூக்கா, ஜமீன் புரவிபாளையம் தாக்கல் 25/2 சேர்வைகாரன் பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180 நெ.காலை பு.ஏ.2.37, க.ச.181 நெ. காலை பு.ஏ.5.72 இவைகளில் அதாவது க.ச.181 நெ.காலையில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தென்வடலாகவும் அதிலிருந்து கிழமேலாகவும் அதைத் தொடர்ந்து க.ச.180 நெ.காலையில் கிழமேலாகவும் தென்வடலாகவும் க.ச.205 நெ. காலையில் அன்னபூரணி வகையராவிடம் கிரையம் பெறப்போகும் பூமி வரையில் உள்ள 7½ அடி அகல வண்டித்தடம் மட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

15) அதுபோல் ம.சா.ஆ.2 வண்டித்தட ஒப்பந்தத்தில் கோலாலி ராவுத்தர் மனைவி ரஹமத்பீபி, கோலாலி ராவுத்தர் மக்கள் குடித்தனம் சாகுல் அமீது, அப்பாஸ் சந்தேகவுண்டன்பாளையத்தில் வசிக்கும் கந்தசாமிகவுண்டர் மனைவி முத்துலட்சுமி ஆகிய நாம் சேர்வைக்காரன்பாளையம் கிராமம்புலத்தில் க.ச.180 க.ச.181 ஆகிய காலைகளில் உள்ள பூமிகளில் அதாவது கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து ரஹமத்பீபி, சாகுல் அமீது, அப்பாஸ், முத்துலட்சுமி க.ச.180 நெ.காலையில் கிழகோட்டில் 7½ அடி அகலத்தில் தென்வடலாகவும் பின்னும் க.ச.180 நெ. காலையில் 7½ அடி அகலத்தில் கிழமேலாகவும் ஷை தடத்தில் வளைவான இடங்களில் 9 அடி அகலத்திலும் பின்னும் க.ச.181 நெ. காலையில் தென்வடலாகவும் உள்ளதும் தற்போதைய நில உரிமை மேம்பாட்டுத்திட்ட சர்வேயில் பிளான் மார்க் செய்யப்பட்டதுமான 1, 2, 3 லக்கமிட்டவர்களுக்கு பாத்தியப்பட்டதுமான வண்டித்தடத்தில் 4ம் லக்கமிட்டவரும் அவரது கணவர் கந்தசாமிக்கவுண்டரும் கிரையம் பெற்றுள்ள சேர்வைகாரன்பாளையம் கிராமம் க.ச.183 நெ. காலை பூமிக்கு 4ம் லக்கமிட்டவரும் அவரது கணவர் கந்தசாமிக்கவுண்டரும் மற்றும் 4ம் லக்கமிட்டவரின் வாரிசுகள் மற்றும் அவரது ஆட்களும் வண்டி, கால்நடை, கோட்டேர் முதலானவைகளும் பரம்பரையாக

போகவர நடந்து கொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

16) ம.சா.ஆ.3 வண்டித்தட ஒப்பந்த ஆவணத்தில் கோலாலி ராவுத்தர் மனைவி ரஹமத்பீபி, கோலாலி ராவுத்தர் மக்கள் சாகுல் அமீது, அப்பாஸ், கந்தவடிவேல் ஆகிய நாம் நால்வரும் சேர்ந்து எழுதிக் கொண்ட வண்டித்தடபாத்திய உடன்படிக்கை என்னவென்றால் நம்மளில் 1, 2, 3 லக்கமிட்டவர்களுக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்டதும் மேற்படி சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180, 181 ஆகிய காலைகளில் உள்ள பூமிகளில் அதாவது கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து க.ச.180 நெ. காலையில் கிழகோட்டில் 7½ அடி அகலத்தில் தென்வடலாகவும் பின்னும் ஷை 180 நெ. காலையில் 7½ அடி அகலத்தில் கிழமேலாகவும் அதாவது ஷை தடத்தில் வளைவான பாகத்தில் 9 அடி அகலத்திலும் பின்னும் க.ச.181 நெ. காலையில் தென்வடலாகவும் உள்ள வண்டித்தடத்தில் 4 லக்கமிட்டவரும் அவரது வண்டி கால்நடை, ஆட்கள் வாகனங்களும் 4 லக்கமிட்டவர் அன்னபூரணி வகையராவிடமிருந்து கிரயம் பெறப்போகும் பூமியான க.ச. 205 நெ. காலைக்கு போகவர இதன் மூலம் 1, 2, 3 இலக்கமிட்டவர்கள் பாத்தியம் கொடுத்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

17) மேற்படி ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 வண்டித்தட ஒப்பந்த ஆவணங்களின் படி கோலாலி ராவுத்தர் மனைவி ரஹமத்பீபி, கோலாலி ராவுத்தர் மக்கள் குடித்தனம் சாகுல் அமீது, அப்பாஸ் சந்தேகவுண்டன்பாளையத்தில் வசிக்கும் கந்தசாமிகவுண்டர் மனைவி முத்துலட்சுமி ஆகிய நாம் சேர்வைக்காரன்பாளையம் கிராமம்புலத்தில் க.ச.180 க.ச.181 ஆகிய காலைகளில் உள்ள பூமிகளில் அதாவது கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து ரஹமத்பீபி, சாகுல் அமீது, அப்பாஸ், முத்துலட்சுமி க.ச.180 நெ.காலையில் கிழகோட்டில் 7½ அடி அகலத்தில் தென்வடலாகவும் பின்னும் க.ச.180 நெ. காலையில் 7½ அடி

அகலத்தில் கிழமேலாகவும் ஷை தடத்தில் வளைவான இடங்களில் 9 அடி அகலத்திலும் பின்னும் க.ச.181 நெ. காலையில் தென்வடலாகவும் உள்ளதும் தற்போதைய நில உரிமை மேம்பாட்டுத்திட்ட சர்வேயில் பிளான் மார்க் செய்யப்பட்ட வண்டித்தடத்திலும், சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் க.ச.180, 181 ஆகிய காலைகளில் உள்ள பூமிகளில் அதாவது கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து க.ச.180 நெ. காலையில் கிழகோட்டில் 7 ½ அடி அகலத்தில் தென்வடலாகவும் பின்னும் ஷை 180 நெ. காலையில் 7½ அடி அகலத்தில் கிழமேலாகவும் அதாவது ஷை தடத்தில் வளைவான பாகத்தில் 9 அடி அகலத்திலும் பின்னும் க.ச.181 நெ. காலையில் தென்வடலாகவும் உள்ள வண்டித்தடத்தில் 4 லக்கமிட்டவரும் அவரது வண்டி கால்நடை, ஆட்கள் வாகனங்களும் 4 லக்கமிட்டவர் அன்னபூரணி வகையராவிடமிருந்து கிரயம் பெறப்போகும் பூமியான க.ச.205 நெ. காலைக்கு போகவர உள்ள வண்டித்தடத்திலும் மனுதாரர்கள் / வாதிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

18) ஆனால் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாவா சி செட்யூல் வண்டித்தடமானது க.ச.எண்.180 மற்றும் 181 காலைகளில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தென்வடலாக செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 வண்டித்தட ஒப்பந்தங்களில் க.ச.எண்.180 மற்றும் 181 காலைகளில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தென்வடலாக செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

19) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரங்களுக்கு முரணாக மனுதாரர்கள் / வாதிகள் தாவா சி செட்யூல் சொத்து விபரத்தை குறிப்பிட்டுள்ளதாகவும், க.ச.க.ச.எண்.180 மற்றும் 181 காலைகளில் செல்லும் வண்டித்தடம் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு

தனித்து பாத்தியப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

20) ஒப்புக்கொண்டுள்ளவாறு, ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வண்டித்தட ஒப்பந்தங்களில் தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தொடங்கும் வண்டித்தடம் என்றும், தாவா சி செட்யூல் சொத்து விபரத்தில் கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தொடங்கும் வண்டித்தடம் என்று முரணாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் க.ச.எண்.180 மற்றும் க.ச.எண்.181 காலைகளில் செல்லும் வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு வண்டித்தட அனுபவ உரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

21) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் "தாவா சொத்தானது கிழமேலாக செல்லும் நஞ்சையன் கோவில் தார் ரோட்டிலிருந்து தெற்கு நோக்கி வண்டிப்பாதை செல்கிறது அதற்கு ஏ என்று பெயரிட்டுள்ளேன். தென்வடலாக செல்லும் வண்டிப்பாதையின் கிழக்கிலும், மேற்கிலும் பிரதிவாதியின் பூமி உள்ளது. தென்வடலாக செல்லும் வண்டிப்பாதை அங்கிருந்து மேற்கே செல்கிறது. வண்டிப்பாதையின் தெற்கிலும், வடக்கிலும் பிரதிவாதியின் பூமி உள்ளது. பின்னர் வண்டிப்பாதை சற்றே திரும்பி தெற்கு நோக்கி செல்கிறது. தெற்கு நோக்கி செல்லும் வண்டிப்பாதையின் கிழக்கே பிரதிவாதியின் பூமி உள்ளது. வண்டிப்பாதையின் மேற்கே 3ம் பிரதிவாதியின் பூமி உள்ளது. தெற்கு நோக்கி செல்லும் வண்டிப்பாதையின் மேற்கே 3ம் நபர் பூமியும், கிழக்கே பிரதிவாதியின் வீடும் இருந்தது. மேலும் தெற்கே செல்லும் வண்டிப்பாதை 1, 2 வாதிகளின் பூமியை சென்றடைகிறது. மேற்படி வண்டித்தடத்தின் அகலம் சுமார் 15 அடி அகலம்" என்று ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

22) ஆணையர் அறிக்கையிலும் தாவா சி செட்யூல் வண்டித்தடமானது கிழமேலாக செல்லும் நஞ்சையன் கோவில் தார் ரோட்டிலிருந்து தெற்கு நோக்கி

செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தாவா சி செட்யூல் வண்டித்தடமானது தென்வடல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தொடங்குகிறதா அல்லது கிழமேல் புறம்போக்கு இட்டேரியிலிருந்து தொடங்குகிறதா என்பது பற்றி வழக்கு விசாரணையின்போது முன்னிறுத்தப்படும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக தான் தெளிவுப்படுத்திக் கொள்ள இயலும் என்ற நிலையில் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளவாறு வண்டித்தடத்தை அனுபவிக்கும் உரிமை மனுதாரர்கள் / வாதிகளுக்கு உள்ளது என்ற நிலையில் மேற்படி வண்டித்தட உரிமையை ஏற்படுத்திக் கொடுத்த ரஹமீத்பீபி வகையறாக்களிடமிருந்து கிரையம் பெற்ற எதிர்மனுதாரர் / பிரதிவாதி அதனை தடுக்க இயலாது என்ற நிலையில் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளவாறும், பின்னர் ம.சா.ஆ.5 வண்டித்தட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் உள்ள வண்டித்தடத்தினை அனுபவிக்கும் உரிமை மனுதாரர்கள் / வாதிகளுக்கு உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

23) எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் கணவர் சதீஷ் வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் அவர் மனுதார்கள் / வாதிகள் தாவா வண்டித்தடத்தினை பயன்படுத்தி வருவதை எவ்வித இடையூறும் செய்யாத காரணத்தால் அவரை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் முன்னிறுத்தியுள்ள வாதம் ஏற்கத்தக்க வகையில் உள்ளதாக தெரிய வருகிறது.

24) எனவே, ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளவாறு வண்டித்தடத்தினை அனுபவிக்கும் உரிமை எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களால் மனுதாரர்கள் / வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதால் மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஆதரவாக

முதல் தோன்றல் வழக்கும், சட்டசமன் நோக்கும் எழுந்துள்ளதாக தெரிய வருகிறது.

25) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ள வண்டித்தடத்தினை தவிர வேறு வண்டித்தடம் எதுவும் இல்லை என்று கூறியுள்ள நிலையில், மேற்படி வண்டித்தடத்தினை பயன்படுத்துவதற்கு எதிர்மனுதாரர் / பிரதிவாதி இடையூறு செய்யும் பட்சத்தில் அது மனுதாரர்கள் / வாதிகளுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால் ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 வண்டித்தட ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளவாறு வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை அசல் வழக்கு முடிவடையும் வரை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

26) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, 12.06.1985 ம் தேதியிட்ட ம.சா.ஆ.2 வண்டித்தட ஒப்பந்தம் மற்றும் 28.01.1999 ம் தேதியிட்ட வண்டித்தட ஒப்பந்தம் ம.சா.ஆ.3 மற்றும் 02.09.2008 ம் தேதியிட்ட ம.சா.ஆ.5 வண்டித்தட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்திற்கு செல்வதற்குண்டான வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை அசல் வழக்கு முடிவடையும் வரை எதிர்மனுதாரர் / பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் உறுதி செய்யப்பட்டும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

Page numbers

பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜீன் மாதம் 21ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.06.21 17:29:17 -0400

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றவாணங்கள் பட்டியல்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 12.06.1985 | கிரைய பத்திரத்தின் நகல் |
| ம.சா.ஆ.2 | 12.06.1985 | வண்டித்தடப்பாத்திய உடன்படிக்கை ஆவணத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.3 | 28.01.1999 | வண்டித்தடப்பாத்திய உடன்படிக்கை ஆவணத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.4 | 29.01.1999 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.5 | 02.09.2008 | வண்டித்தடப்பாத்திய உடன்படிக்கை ஆவணத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.6 | 28.09.202 | பட்டா எண்.6-க்கான கணினி வழி சிட்டா |
| ம.சா.ஆ.7 | 28.09.2020 | பட்டா எண்.956 க்கான கணினி வழி சிட்டா |
| ம.சா.ஆ.8 | 28.09.2020 | பட்டா எண்.890 க்கான கணினி வழி சிட்டா |
| ம.சா.ஆ.9 | 28.09.2020 | பட்டா எண்.808 க்கான கணினி வழி சிட்டா |
| ம.சா.ஆ.10 | - | சர்வே எண்.180-க்கான கிராம புல வரைபடம் |
| ம.சா.ஆ.11 | - | சர்வே எண்.181-க்கான கிராம புல வரைபடம் |
| ம.சா.ஆ.12 | 28.09.2020 | மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர் / பிரதிவாதியின் மீது காவல் நிலையத்தில் அனுப்பிய புகார் மனுவின் நகல் |
| ம.சா.ஆ.13 | 30.09.2005 | கந்தசாமி கவுண்டர் என்பவரின் இறப்பு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.14 | 02.05.2009 | முத்துலட்சுமி என்பவரின் இறப்பு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.15 | 18.07.2009 | முத்துலட்சுமி என்பவரின் வாரிசுரிமை சான்றின் நகல் |

Page numbers

**<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 02.11.2011 | கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 09.12.2011 | கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 28.07.2021 | பட்டா எண்.890 க்கான கணினி வழி பட்டா |
| எ.ம.சா.ஆ.4 | 28.07.2021 | பட்டா எண்.808 க்கான கணினி வழி பட்டா |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் பட்டியல் :</u>**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | நீதிமன்ற ஆணையர் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | – | நீதிமன்ற ஆணையர் வரைபடம் |

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.06.21 17:29:27 -0400

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

--------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.295/2020 இல் இ.ம.எண்.01/2020

நாள் : 21.06.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

--------------------------------